செ.வெ.எண்:16/2017 நாள்:09.08.2017

**சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், உலகம்பட்டி கிராமத்தில் 46 பயனாளிகளுக்கு ரூ.6,86,700/- மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் வழங்கினார்.**







சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், உலகம்பட்டி கிராமத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 46 பயனாளிகளுக்கு ரூ.6,86,700/- மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

வருவாய்த்துறை மூலம் 15 பயனாளிகளுக்கு ரூ.1,24,000/- மதிப்பில் திருமண உதவித் தொகைக்கான ஆணையும், 18 பயனாளிகளுக்கு ரூ.3,45,000/- மதிப்பில் இயற்கை மரண உதவித் தொகைக்கான ஆணைகளையும், சமூகப்பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 4 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1,000/- உதவித் தொகைக்கான ஆணைகளையும், ஒரு நபருக்கு தீராத நோயுற்றவருக்கான ரூ.1,000/- உதவிக்கான ஆணையும், தோட்டக்கலைத் துறையின் சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.15,000/- மானியத்தில் நகரும் காய்கறி வண்டி, 1 பயனாளிக்கு ரூ.20,000/- மானியத்தில் மா ஒட்டு செடிகளையும், 1 பயனாளிக்கு ரூ.1,77,500/- மானியத்தில் நிழல் வலைக்கூடம் அமைப்பதற்கான பணி ஆணையும், 1 பயனாளிக்கு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ரூ.200/- மானியத்தில் மாடித் தோட்டம் சிறு தளைகளையும், வேளாண்மைத் துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு 20 கிலோ அளவில் உளுந்தும், 2 நபர்களுக்கு 5 கிலோ அளவில் புளுரோட்டர்ஸ் காளான் இடுப்பொருட்கள் உட்பட 46 பயனாளிகளுக்கு ஆக மொத்தம் ரூ.6,86,700/- மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கிப் பேசியதாவது,

எந்த ஒரு திட்டத்திற்கும் ஒரு நோக்கம் இருக்கும் என்றும், திட்டங்களை தெளிவாகத் தெரிந்து கடமையை செய்பவர்கள் தங்களது உரிமையை பெறமுடியும் எனவும், அரசு பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நலத்திட்ட உதவிகளை வழங்கி வருவதாகவும், பெண்கள் நாட்டின் கண்கள் அவர்களுக்கு செய்யும் நலத்திட்டங்கள் அவர்களது குடும்பத்தைச் சென்றடையும் என்றும், கர்ப்பிணிப்

பெண்களுக்கு ரூ.18,000/-மும், சமூகநலத் துறையின் மூலம் திருமண உதவிக்கான தாலிக்கு தங்கம் உட்பட எண்ணற்ற திட்டங்களை அரசு தீட்டி வழங்கி வருகிறது. அரசு கொடுக்கக்கூடிய திட்டங்கள் அனைத்தும் அடுத்த தலைமுறைக்கான முதலீடு என்றும், பெண்களை கல்வி அறிவுடையவர்களாக உருவாக்கி, தனது கடமையை சரியாக செய்த பெற்றோர்களுக்கு அரசு தரும் பரிசுதான் இத்திட்டங்கள் எனக் கூறினார். மேலும், பெண்கள் வீட்டில் சேமித்து வைக்கும் நீரில் டெங்கு கொசு உருவாகுகிறது என்றும், தண்ணீரை வடிகட்டி பாதுகாப்புடன் மூடி வைத்து பயன்படுத்துமாறும், எளிய வழிமுறைகளை பின்பற்றினால் நமது மாவட்டத்தை டெங்கு இல்லாத மாவட்டமாக மாற்ற முடியும்.

தன் சுத்தம் மட்டும் போதாது, தன்னைச் சார்ந்த சுற்றுப்புறத்தையும் பாதுகாக்க வேண்டியது பெண்களின் கடமை என்றும், குடும்ப ஆரோக்கியம் பெண்கள் கையில்தான் உள்ளது என்றும், எல்லாத் திட்டங்களும் பெண்களே முன்னிலைப்படுத்தி அரசு செயல்படுவதாகவும், கழிப்பறையின் அவசியம் உணர்ந்து கழிப்பறை கட்டி திறந்தவெளி கழிப்பறை இல்லாத நமது மாவட்டமாக விளங்க பொதுமக்கள் ஒத்துழைப்பு தரவேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புகழேந்தி, சிங்கம்புணரி வட்டாட்சியர் திருமதி.தனலெட்சுமி, அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.